II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 377 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 05.04.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Tamil Selvan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | District | : | |

<u>முதல் விசாரணை=</u>

என்னுடைய பெயர் தமிழ்செல்வன். நான் வழக்கின் வாதி. என்னுடைய பிரமாணப் பத்திரத்தினை இன்று தாக்கல் செய்கின்றேன். அதனை எனது முதல் விசாரணைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் உள்ள விவரங்கள் உண்மையானவை. பிரமாணப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழே கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

1. 13.02.2020 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட ரூ.25 லட்சத்திற்கான அடமான கடன் பத்திரத்தின் அசல் வா.த.சா.ஆ.1

2. 19.08.2020 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட ரூ.11 லட்சத்திற்கான அடமான கடன் பத்திரத்தின் அசல் வா.த.சா.ஆ2

3. 05.12.2020 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட ரூ.5 லட்சத்திற்கான அடமான கடன் பத்திரத்தின் அசல்வா.த.சா.ஆ.3

4. 04.12.2021 தேதியிட்ட பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர்

அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.4.

5. 02.05.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.த.சா.ஆ.5.

6. 06.05.2022 தேதியிட்ட நான் என் வழகறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.6.

7. பிரதிவாதிகளின் வழக்கறிஞர் பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புதல் அட்டைய வா.த.சா.ஆ.7.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகின்றது)